RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# ஐங்குறுநூற்றில் மெய்யியல் கூறுகள்

குு. சிந்து [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Elements in the Ainkurunuru

**K. Sindhu [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, Tamil Nadu, India.

* Corresponding Author: sindhufenin@gmail.com

Received: 13-05-2025
Revised: 30-08-2025
Accepted: 16-09-2025
Published: 29-09-2025

Check for updates

**ABSTRACT**

All arts should instill imagery and emotion in the soul. It is in this way that poetry also manifests itself with excellent lyrical qualities. Emotion is the essence of poetry. Poems full of emotion were greatly loved by the people. The purpose of poetry is to refine the hearts of the people with sentimental ideas. In this way, lyrical verses are the polished parts of literature. Lyric verses reveal the nature of the characters in the poem. If we know the nature of the character in this way, we can easily understand the idea conveyed through the character. Furthermore, these lyrical verses are the proof that literature emotionally portrays the life of humans. This study has become a platform to focus on the special qualities of the feelings expressed in the "Ainkurunuru" poems through lyrical elements.

**Keywords:** Ainkurunuru, People, Emotion, Philosophical Elements, Poems

## முன்னுரை

உணர்வு என்பது உள்ளத்துள் தோன்றுகின்ற ஒரு வகையான எண்ணம் அல்லது உணர்ச்சி என்று கூறுவர். இது தோன்றியதன் அறிகுறியாக அல்லது ஏற்றுக்கொண்டதன் அறிகுறியாக உடலிடத்தே தோன்றும் எதிர்வினையே மெய்ப்பாடு. பாடல்களில் படைக்கப்படுகின்ற பாத்திரங்கள் உயிர்ப்புடன் திகழவும், அப்பாத்திரங்கள் நேரடியாக வாசகனிடத்தில் உரையாடுவது போன்ற அனுபவத்தை ஏற்படுத்தவும், உணர்வுகளே துணை செய்கின்றன. பொதுவாகச் சங்க இலக்கியங்கள் உணர்ச்சிகளை வெறும் உணர்ச்சிகளாக மட்டும் உரைக்காமல் இன்பத்தையும் சமூக அறத்தையும் வலியுறுத்தும் காரணிகளாகவும் அமைகின்றன. இவ்வகையில் ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள மெய்ப்பாட்டியல் கூறுகளை விளக்கிக் கூறுவது இவ்வாய்வாகும்.

## மெய்ப்பாட்டியல் விளக்கம்

மெய்ப்பாட்டின் இயல்பைத் தொல்காப்பியனார்.

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்" (தொல்காப்பியம் பொருள் - 196)

எனக் கூறுகின்றார். உய்த்து உணர்வதால் அன்றி இயல்பாகவே வெளிப்படும் உணர்ச்சிகளைச் செய்யுளில் புலப்பட அமைப்பதே மெய்ப்பாடு ஆகும்.

பாட்டில் புலவனின் உள்ளத்துணர்ச்சி இயல்பாகப் படிகின்றது. அவனது உணர்ச்சியைப் பாட்டு, படிப்போர்க்குப் புலப்படுத்துதலும் வேண்டும். பாட்டில் வெளிப்படும் புலவனின் உணர்ச்சி வெளிப்பாட்டை மெய்ப்பாடு எனலாம்.இலக்கியத்தில் படைக்கப்படும் மாந்தர்களின் மூலம் புலவன் தன் உணர்ச்சியினை வெளிப்படுத்துதலும் மெய்ப்பாடு என வழங்கப்பெறும் என்கிறார் தொல்காப்பியர்.எண்வகை மெய்ப்பாடுகளும் முப்பத்திரண்டு உணர்ச்சிகளால் வெளிப்படும் என்பது தொல்காப்பியனார் கருத்து. இதனை,

“பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்

கண்ணிய புறனே நானான் கென்ப” (தொல்காப்பியம் பொருள் - மெய்ப்பாட்டியல் -1)

எனக் கூறுகின்றார் அவர்.

## உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும் - வகை, தொகை விளக்கம்:

தொல்காப்பியர், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார். இம்மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நான்கு நான்கு உணர்ச்சிகளால் தோன்றுமெனக் கூறுகின்றார். இவை அகத்திற்கும், புறத்திற்கும் பொதுவானவை.

| மெய்ப்பாடு | உணர்ச்சிகள் |
|---|---|
| நகை | எள்ளல், இளமை, பேதைமை, மடன் |
| அழுகை | இளிவு, இழவு, அசைவு, வறுமை |
| இளிவரல் | மூப்பு, பிணி, வருத்தம், மென்மை |
| மருட்கை | புலமை, பெருமை, சிறுமை, ஆக்கம் |
| அச்சம் | அணங்கு, விலங்கு, கள்வர், இறை |
| பெருமிதம் | கல்வி, தறுகண், இசைமை, கொடை |
| வெகுளி | உறுப்பறை, குடிகோள், அலை, கொலை |
| உவகை | செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு |

## அகத்திணை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியனார் அகத்திணை மெய்ப்பாடுகள் அறுபத்தி மூன்றினைக் கூறுகின்றார். அவை களவிற்கும், கற்பிற்கும் உரியன. களவுக்கால மெய்ப்பாடுகளை,

1. களவுக்குரிய மெய்ப்பாடுகள்
2. பிரிவு கால மெய்ப்பாடுகள்
3. வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள் என்றும் மூன்று பிரிவுகளால் பிரிக்கலாம்.

## களவுக்குரிய மெய்ப்பாடுகள்

புதுமுகம் புரிதல் முதலாக, கையுறைவுரைத்தல் ஈறாகக் கூறப்படும் இருபத்தி நான்கு (24) மெய்ப்பாடுகள் தலைவன், தலைவி சந்திப்பு முதல் களவு வெளிப்பாடுகள் ஆறு அவத்தைகளாக நிகழ்வன” ஒவ்வோர் அவத்தைக்கும் நான்கு மெய்பாடுகளாக வெளிப்படுத்துகின்றார் தொல்காப்பியர்.

அ. சந்திப்பு முதல் புணர்ச்சிகாறும் நிகழ்வன,

ஆ. புணர்ச்சிக்கும் பின் களவு வெளிப்படுங்காறும் நிகழ்வன.

என இரண்டாகப் பிரிக்கலாம்.

## பிரிவுக்கால மெய்ப்பாடுகள்

இன்பத்தை வெறுத்தல், முதலாக கலக்கம் ஈறாகக் கூறப்படும் இருபது (20) மெய்ப்பாடுகள் காதலரிடையே பிரிவுக்காலத்தில் தோன்றுவன. இவற்றில் சில களவிலும் சில கற்பிலும் சில களவு, கற்பு என்ற இரு கைகோள்களிலும் பயின்று வருகின்றன.

## வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள்

முட்டுவயிற் கழறல் முதலாக கட்டுரையின்மை ஈறாக எட்டு மெய்ப்பாடுகளைக் கூறுகின்றார் தொல்காப்பியர். இவை தலைவனை வரைவு முடுக்கும் பொருட்டுத் தலைவியால் நிகழ்வனவாகும்.

## கற்புக்கால மெய்ப்பாடுகள்

வரைவுக்குப் பின்னர் கற்புக்கால மெய்ப்பாடுகளாகத் தெய்வமஞ்சல் முதலாக புறஞ்சொல் மாணாக்கிளவி ஈறாக பதினொரு (11) மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியனார் கூறுகின்றார்.

## ஐங்குறுநூற்றில் நகை

எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் நான்கு உணர்ச்சிகளால் நகைபிறக்கும். நகை தோன்றும் இடங்களை இளம்பூரணரும், பேராசியரியரும் விளக்கியுள்ளனர்.

நகை என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதி பதினெட்டு பொருள்களைக் கூறுகின்றது. நகையின் பொருள் சிரிப்பு ஆகும். சிரிப்பின் வளத்தை உணர்ந்து மகிழும் ஆற்றல் மனித மனத்திற்கு உண்டு. உள்ளத்தோடு நகை தொடர்பு கொண்டதைத் தொல்காப்பியனார் உள்ளப்பட்ட நகை என்பர். நகைப்பு வெளிப்பட நிகழ்வதற்கும், அகத்தே உண்டாவதற்கும், வெளிப்பட நிகழும் நகைச்சுவையை மிகுதிப்படுத்துவதற்கும், குறைத்தற்கும், நகைப்பின் தன்மையை மாற்றி விடுவதற்கும் மனநிலையே காரணமாகும். நகை வெளிப்பாடுகளை,

"நகையின் அவிநயம் நாட்டுங் காலை

மிகைபடு நகையது பிறர்நகையுடையது

கோட்டிய முகத்தது...............

விட்டுமுரி புருவமொடு விலாவிறுப் புடையது" (சிலப்பதிகாரம்)

என்கிறது சிலப்பதிகாரம்.

## இளமை நகை

இளமை உணர்ச்சியால் நகை பிறக்கும் இளமை என்பது 'மழவு' அதாவது சிறுப்பிள்ளைத் தன்மை" வயதில் பெரியோராயினும் சிறுபிள்ளைகள் செய்வது போன்ற செயல்களிலோ அல்லது பேச்சிலோ ஈடுபடுகின்றனர். அத்தகைய செயல்களைப் பார்ப்போரோ, பேச்சைக் கேட்பாரோ நகைத்து விடுகின்றனர். இவ்வாறான நகைதான் இளமை நகையாகும்.தலைவன் தலைவி உரையாடல்களிலும் செயல்களிலும் நடத்தைகளிலும் இளமை நகையை நுட்பமாகக் கையாண்டுள்ளனர் சங்கப்புலவர்கள்.ஏதும் அறியாத இளமைக்குணம் நிரம்பிய தலைவியிடம் தலைவன் வழிநெறி அச்சம் கூறினான். இதையறிந்த தோழி தலைவியின் பிள்ளைத் தன்மையையும் தலைவன் கூற்றையும் இயைந்து நகை மயக்கச் செய்கின்றாள். தலைவன் வழிநெறி அச்சம் கூறியது தலைவியின் இளமையில் தோன்றும் நடுக்கம் கண்டு நகைத்தற் பொருட்டே என்றாள் இதனை,

"வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்

செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்

செவ்வாய்க் குறுமகள் இளைய

எவ்வாய் முன்னின்று மகிழ்ந்த நின்தேரே" (ஐங்குறுநூறு-52)

என்ற பாடல் அடி மூலம் அறிந்து கொள்ளலாம்.

## அழுகை

இளிவு, இழவு, அசைவு, வறுமை என்னும் நான்கு உணர்ச்சிகளால் அழுகை பிறக்கும் என்பார் தொல்காப்பியனார்.

## போர்ப்பிரிவு

போர்ப்பிரிவினால் தலைவனை விட்டுப் பிரிந்த தலைவி மிகுந்த துன்பத்திற்கு ஆளாகின்றாள். போரின் கொடுமையை அகப்பாடல்கள் காட்டவில்லையென்றாலும் போர்ப்பிரிவினால் துயருறும் காதலரைக் காட்டுகின்றன. தலைவியிடம் தோன்றிய துயர மெய்ப்பாடுகளைப் பேயனார் காட்டுகின்றார். அவளது உள்ளத் துயரை கையறு நெஞ்சம் எனக் குறிப்பர். உள்ளத்துயரினால் கண் கலுழ்தல், அழுதல், பசலைப் பாய்தல், உடம்பு நடுங்குதல் முதலான துயர மெய்ப்பாடுகள் வெளிப்பட்டன. இதனை,

“மெல்லிறைப் பணைத்தோள் பசலை தீரப்

புல்லவும் இயைவது கொல்லோ புல்லார்

ஆர் அரண் கடந்த சீர்கெழு தானை

வெல்போர் வேந்தனோடு சென்ற

நல்வய லூரன் நறுந்தண் மார்பே” (ஐங்குறுநூறு - 459)

என்ற பாடல் அடிகள் உறுதி செய்கின்றன.

## பொருள் வயிற் பிரிவு

அக இலக்கியத்தில் மூன்றில் இருகூறாகப் பாலைத் திணைப்பாடல்கள் அமைகின்றன. தலைவியின் பிரிவாற்றாத் துயரைப் பல படியாகப் பாலைப் புலவர் பாடிக் கவிதையின்பம் அளிக்கின்றனர். இதுபற்றி வ.சு.ப.மாணிக்கம் “துன்பத்தின் இன்பமே கவிதைக்கும் கற்பார்க்கும் சுவைக்கும் ஆதலின் சங்கச் சான்றோர் பாலைத் துறைகளை விரும்பிப் பாடினர் எனக் கூறுவர்” (தமிழ்க்காதல் வ.சு.ப மாணிக்கம் பக் - 98) பொருள் வயிற் பிரிவால் காதலரிடம் தோன்றும் துயர மெய்ப்பாடுகளைப் பாலைத் திணைப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.பிரிவுணர்த்தப்பட்ட தலைமகள் அடையும் துயரத்தின் வெளிப்பாடுகளாகக் கண்ணீர் பெருகல், கைவளை நெகிழ்தல் காட்டப்படுகின்றன. இதனை,

“அம்ம வாழி தோழி சிறியிலை

நெல்லி நீடிய கல்காய் கடத்திடைப்

பேதை நெஞ்சம் பின்செலச் சென்றோர்

கல்லினும் வலியர் மன்ற

பல்லிதழ் உண்கண் அழப்பிரிந்தோரே” (ஐங்குறுனூறு-334)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

## இளிவரல்

இளிவரல் என்பதற்கு ‘இழிப்பு’ என இளம்பூரணரும் அடியார்க்கு நல்லாரும் ‘இழிபு’ எனப் பேராசிரியரும் பொருள் கூறுவர். இளிபு, இழிபு, இழிப்பு என உரையாசிரியர்கள் பல்வேறு பாட வேறுபாடுகளைக் கொண்டாலும் பொருள் புலப்பாட்டில் தெளிவின்மை காணப்படுகின்றது.மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்கு உணர்ச்சிகளால் இளிவரல் பிறக்கும் என்பர் தொல்காப்பியனார்.

## மூப்பு இளிவரல்

முதுமை காரணமாகத் தோன்றும் மனச் சோர்வும், உடல் தளர்ச்சியும் மூப்பு ஆகும். முதிர்ந்த தள்ளாத வயதில் யாக்கையின் நிலைபற்றித் தோன்றும் இளிவரல் மூப்பு உணர்ச்சியின்பாற்படும். யாக்கை முதுமை அடையும்போது உடல் நடுக்கம், தளர்ச்சி, இருமல் கலந்த சொல், நரை என்பன மூப்பின் அறிகுறிகளாகத் தோன்றும்.மூப்பும் நலக்குறைவும் உடையளாகி இளிவந்தனம் என்பதை ‘புதல்வனை ஈன்ற எம்மேனி தலைவன் குறிப்பிட்டு முயங்கற்குரிய இளமை தன்னிடம் இல்லை எனக் கூறுகின்றாள் தலைவி.

இதனை,

“புதல்வனை ஈன்ற எம்மேனி

மயங்கன்மோ தெய்ய நின்மார்பு சிதைப்பதுவே” (ஐங்குறுநூறு -65)

என்ற பாடல் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

## பிணிவருத்தம்

உணர்ச்சியால் பாதிக்கப்பட்ட காதலர் நெஞ்சங்களையும், மெய் வேறுபாடுகளையும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. காதலரின் அகநோயையும், வருத்த மிகுதியையும் சங்கப்புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

“உணர்ச்சி அழுத்தமே உளநோய்க்குக் காரணம்” (பிறழ் நிலை உளவியல்-ஜேம்ஸ்.டி.பேஜ் - பக் 127)

“உணர்ச்சி அழுத்தத்தால் தாக்குண்ட தலைவியின் அகநோய் மிகுதியையும், அதனால் தோன்றும் பசலை பாய்தல், கண்கலுழ்தல் ஆகிய மெய்ப்பாடுகளையும் காட்டுவர் பரணர்” இதனை அம்மூவனார்,

“பைதலம் அல்லேம் பாண! பணைத்தோள்

ஐதமைந்து அகன்ற அல்குல்

நெய்தலம் கண்ணியை நேர்தல் நாம் பெறினே” (ஐங்.135)

என்ற பாடல் அடிகள் மூலம் விளக்குகின்றார்.

## மருட்கை

“புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கு உணர்ச்சிகளால் மருட்கை பிறக்கும் இம்மெய்ப்பாடு அற்புதம், வியப்பு எனவும் பெயர் பெறும்

புதுமைக் காட்சியால் பிறக்கும் மருட்கை:

புதுமையான காட்சிகள் வியப்பளிக்கும் தன்மையன. ஐங்குறுநூறு மருதப்பாடலில் இடம்பெற்றுள்ள ஒரு பாடலானது மருட்கைத் தோன்றும் வகையில் அமைந்துள்ளது.

“பரியுடை நன்மான் பொங்குளை அன்ன

அடைகரை வேழம் வெண்பூப்பகரும்” (ஐங். 13)

குதிரையின் பிடரி மயிர் போன்று வெண்மையான பூக்களை உடையநாணற் செடிகள் உடையது, மருதநிலம் என்னும் பாடலடியானது புதுமைத் தோற்றத்தை விளைவிக்கிறது.

## அச்சம்

“அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்னும் நான்குணர்ச்சியால் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பர் தொல்காப்பியனார்” அவர் கூறும் இந்நான்கு உண்ர்ச்சிகளால் அச்ச மெய்ப்பாடு தோன்றும்.

## அணங்கு அச்சம்

தலைவன் சூள் பொய்த்தவழி தெய்வம் தலைவனைப் பழிக்கும் என்ற அச்சம் தலைவிமாட்டும் தோன்றுவதை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன. இவ் அச்சம் தெய்வம் அஞ்சல் என்ற மெய்ப்பாட்டைச் சார்ந்தது. (ஐங். 52) அணைகளை அழித்துக் கொண்டு வேகமாகச் செல்லும் நீர்பாய்ந்து தாமரைப்பூக்கள் மலரும் தோட்டங்களையுடைய மருதநிலத்தலைவனே நீ என்பால் உரைத்தாய் போல் சபதத்தைப் பரத்தையரிடமும் உரைத்தது. அது பொய்த்தலால் தெய்வம் நின்னை வருத்துமோ என்று தலைவி கலங்கி வருந்துவதன் மூலம் அணங்கு பற்றிய அச்சம் வெளிப்படுகிறது. (ஐங். 53)

## இறை அச்சம்

இறை உணர்ச்சியால் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பர். தொல்காப்பியனார். களவொழுக்கத்தால் தலைவன் தலைவியைக் கூடிப் பிரிந்த நிலையில் அதில் இடையீடு உண்டானமையால் தலைவி மெலிவதைக் கண்டு தாயாரும் பிறரும் தெய்வக்குற்றம் என வழிபாடு மேற்கொள்ளுகின்றனர்.

## அலர் அச்சம்

ஊரார் தூற்றும் அலரால் நேரும் அச்சம் பற்றிய செய்திகள் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் இடம்பெறுகின்றன. அலரச்சம் அச்சத்தின் அலரல் என்னும் மெய்ப்பாட்டின் கண் ஆராயப்படும்.தலைவன் மணம் கொள்வதை நீட்டித்த நிலையில் தலைவன் கேட்குமாறு ஊரார் அவனுக்கு மனையாயினள் என்று உரைத்தது பழிச்சொல்லாகும். மணம் பெறாத நிலையில் மனைவி என்பது பொருந்தாமையினால் இது அலர் அச்சமாயிற்று.(ஐங்குறுநூறு-113) களவொழுக்கம் புரிந்த தலைவன் உரிய காலத்தில் மணம் கொள்ளுதற்கு முற்படாத போது ஊரார் பழிச் சொல்லும் கூறிய நிலையில் (ஐங்குறுநூறு -115) தலைவி அன்னையால் இற்செறிக்கப்பட்டதால் அலர் அச்சம் இடம்பெற்றுள்ளது.

## பெருமிதம்

“கல்வி, தறுகண், இசைமை, கொடை என்றும் நான்கு உணர்ச்சிகளில் பெருமிதம் பிறக்கும் என்பர் தொல்காப்பியனார்” இந்நான்கு உணர்ச்சிகளின் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் பெருமிதம் இடம்பெற்றுள்ளது.

## தறுகண்மை போரில் முனைந்து நிற்றல்

மன்னர்களும், மறவர்களும் போர்;க்களத்திற்குச் சென்று தம் தறுகண்மை புலப்பட முனைந்து முன் நிற்றலே தமக்குப் பெருமிதம் அளிக்கும் என எண்ணினர். இதனை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன.

“மாற்றமும் தானை நோக்கி

ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே” (ஐங்குறுநூறு -45)

அதாவது பகைவரால் வெற்றி கொள்ளுதற்கு அரிய தன்மையில் பாசறையில் நம் தலைவன் தங்கி இருத்தல் என்பது வேந்தனுக்குச் செய்யும் கடமையாக எண்ணினர் ஆடவர்கள்.

மேலும் வேந்தன் தான் போர்ச்செயலைத் தொடங்குவதற்கு காரணமாகிய பகைதணியும் வகையிலும் போர் முரசின் ஒலிமுழக்கம் அடங்குமாறும் சினம் கொண்ட வேந்தனின் பெருமிதம் பண்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(455)

பகைவர்களை வெற்றி கொண்டு அவர்களுடைய கோட்டைகளை அழித்த சிறப்பின் மிக்க படையை உடையவனும், வெற்றி மேவும் போரைச் செய்பவனுமான வேந்தனின் வீரத்தன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## வெகுளி

“உறுப்பறை, குடிக்கோள், அலை, கொலை என்றும் நான்கு உணர்ச்சிகளால் வெகுளி பிறக்கும் என்பர் தொல்காப்பியனார்”

## உடன்போக்குப் பாடல்களில் அன்னையின் வெகுளி

தலைவியின் உடன்போக்கால் தாய் தன் மகளை நினைக்கும்போது இரக்கமும் அவலமும் அடைகின்றாள். ஆனால் தலைவனையும், அவன் தாயையும் நினைக்கும்போது நெஞ்சம் கொதிக்கின்றாள். தலைவியின் மீது வைத்த மிகுதியான அன்பு தலைவன்பாலும், அவள் தாய்ப்பாலும் சினமாக மாறுகின்றது.

தலைவியின் தாய்க்குத் தலைவனது தாய்மேல் வெகுளி உண்டென்பதை ஓதலாந்தையார்.

“நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக

வெஞ்சுரம் என்மகள் உய்த்த

வம்பகை வல்வில் விடலை தாயே” 79 (373)

“பொய்வல் காளையை ஈன்ற தாயே” 80 (399)

என வெளிப்படுத்துவர். உடன்போக்கால் தலைவனும் அவனை ஈன்றதாயும் தம் குடிப்பெருமைக்குக் கேடு சூழ்ந்தனர் இழுக்குத் தேடித் தந்தனர் என்ற குடிகோள் உணர்ச்சியின் வெளிப்பாடே தாயின் சினத்திற்குக் காரணமாகின்றது.

## உவகை

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்னும் நான்கு உணர்ச்சிகளால் உவகை பிறக்கும். அதாவது செல்வ நுகர்ச்சியாலும், ஐம்புலன்களின் நுகர்ச்சியாலும், காமப்புணர்ச்சியாகிய புணர்வாலும், விளையாட்டாலும் உவகை தோன்றும். தொல்காப்பியனார் கூறும் இந்நான்கு உணர்;ச்சிகளால் தோன்றும் உவகை மெய்ப்பாடுகளும், வரைவு, விருந்தோம்பல், வெற்றி இவற்றின் காரணமாகப் பிறக்கும் உவகை மெய்ப்பாடுகளும் உண்டு.

## செல்வம் உவகை:

செல்வம் என்னும் உணர்ச்சியால் உவகை பிறக்கும் செல்வம் என்பது செல்வ நுகர்ச்சியைக் குறிக்கும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் நடுவணது எய்த அறமும், இன்பமும் எய்தும் இல்லறவாழ்வு இன்பம் நிறைந்ததாக அமையும்.

தலைவியைப் பிரிந்து வினையின் மேற்சென்றதலைவன் வேற்றுநாட்டினை நோக்கிச் சென்றான். அதனைக் கண்ட தலைவி தன்னினும் தலைவன் பொருள் செல்வத்தைப் பெரிதாகக் கருதினான் என்று தலைவி கூறிய செய்தி ஐங்குறுநூற்றுப்பாடலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

“நள்ளென வந்த இயல்தேர்ச்

செல்வக் கொண்கன் செல்வன் அஃது ஊரே” (ஐங்குறுநூறு 104)

நள்ளிரவில் தலைவியைக் கண்டு களவொழுக்கத்தில் இருந்து மணம் கொண்டு சென்ற தலைவன் பெருஞ்செல்வன் ஆவான் என்ற செய்தி இப்பாடலில் இடம்பெற்றுள்ளது.

## தலைவி உவகை:

வினைமேற் சென்ற தலைவன் வெற்றியோடு தன்னுடைய செயல்களை ஆற்றி மனைக்குத் திரும்பிய நிலையில் தலைவியும் தலைவனும், மகிழ்கின்றார்கள். தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற போதும் தலைவியின் நினைவிலேயே இருந்ததாகக் கூறி மகிழ்கின்றான். (ஐங்குறுநூறு 491-500)

பாசறைத் தலைவன் வினைமுடிவில் தலைவியை அடையும்போது அவனிடம் தோன்றும் உவகை மெய்ப்பாடுகளை நினைவு கூறுகின்றான். (ஐங்குறுநூறு 441-449)

தலைவியோடு கூடியிருந்து புணர்;வு உவகை எய்திய தலைவன் கார்காலக் கவினைப் பாராட்டுகின்றான் (ஐங்குறுநூறு 412, 414, 419) புணர்வு மிகுதியால் கார்பருவப் பேரழகினைத் தலைவியோடு கூடி நுகர்ந்து இனிதிருப்போம் என்கின்றான் தலைவன். புணர்வு உவகையால் தளைத்த தலைவியின் உடல் பூரித்தது. நன்னலம் எய்தினாள் (ஐங்குறுநூறு 420)தலைவன் இளமையையும், அப்பருவக்காமத்தையும், அக்காமத்தைக் கார்பருவத்தில் நுகர்வதையும், புணர்வுப் பொலிவுகளைக் கண்டு காட்டி இன்புறுவதையும் காண்கின்றோம். நிலமும், பொழுதும் பின்னணியாவது உரிப்பொருளாம் காதலர் இருவரின் புணர்வு இன்பத்தைக் காட்டுகின்றார் பேயனார்.

## முடிவுரை

ஐங்குறுநூற்றில் அச்சம் தோன்றும் நிலக்களன்களாக தெய்வம், பேய், வெறியாட்டு, விலங்கு போன்றவை காணப்படுகின்றன.போரில் வெற்றிபெற்ற தலைவனின் சிறப்பினைப் புகழ்ந்து கூறும்போது பெருமிதச் சுவை தோன்றுகிறது. பெருமித மெய்ப்பாடு சங்கச் சமுதாயத்தின் பெருமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.வெகுளியானது வஞ்சினம் கூறும் மன்னனின் செயல்பாடுகளிலும், சபதத்தைப் பொய்த்து மீண்டும் பரத்தையை நாடிச் செல்லும் தலைவனின் நடத்தையின் காரணமாகவும் பிறக்கும்.உவகையானது இல்லறவாழ்வின் இனிமையினையும், காதலரின் அன்புள்ளத்தையும் வெளிப்படுத்துகின்றது. மெய்ப்பாடுகள் அனைத்தும் மனித மனத்தையே அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுகின்றன. மனிதருக்கு மனிதன் மனம் வேறுபடுவது போல அவர்கள் வெளிப்படுத்தும் மெய்ப்பாடும் வேறுபடும். ஒரே மெய்ப்பாட்டை ஒவ்வொருவரும் அவரவர் உணரும் நிலைக்கேற்ப வெளிப்படுத்துவர். மெய்ப்பாட்டை உணர்வுடையவர்களே உணரமுடியும்

## References

Sadasiva Iyer, T., (1999), Ainkurunuru Source and text, International Institute of Tamil Studies, Chennai, India.

Avvai Duraisamy Pillai, (1957), Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License